3 மே 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலத்தின் 4 ஆம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்: **நிறைவான வாழ்வு**



## அவர் நம்மை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லட்டும்

இன்றைய காலகட்டத்தில் நம்மில் எத்தனை பேர் நிறைவான வாழ்வு வாழ்கிறோம் என்று உறுதியாக கூறமுடியும்? நம்மில் சிலர் உலக செல்வங்களையும், மனித வாழ்வின் சாதனைகள், அல்லது அறிவாற்றல் இருந்தால் தான் நிறைவான வாழ்வு என்று கூறுவர். இன்னும் நம்முடைய அனைத்து பிரச்னைகள், கஷ்டங்களை பணத்தாலும், உலக செல்வங்கள் மற்றும் அனைத்து அறிவாற்றலாலும் தீர்க்கமுடியும் என்றும் கருதலாம்.

இன்றைய ஞாயிறு நற்செய்தி வாசகத்தில், வாழ்வை "நிறைவாக தருவேன்" (யோவான்:10:10) என்று இயேசு வாக்களிக்கின்றார். இந்த வார்த்தைகளைப் புரிந்துகொள்ள நமக்கு கிறிஸ்துவ முதிர்ச்சி வேண்டும். கிறிஸ்துவ நம்பிக்கை நம்மை கிறிஸ்துவின் பார்வையோடுப் பார்க்க அழைக்கின்றது. கடவுளை தாழ்ச்சியோடு முழுமையாக சார்ந்திருப்பதே நிறைவான வாழ்வு. இதைத் தான் இயேசு தாம் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார். நாம் எவ்வாறு இருக்கவேண்டும் என்று கடவுள் விரும்புகிறாரோ அவ்வாறு வாழ்வதே நிறைவான வாழ்வு. இதுதான் கிறிஸ்துவின் உண்மையான சீடனாக மாறுவது.

அவர் விடுக்கும் இந்த அழைப்பு, அவரை முழுமையாகச் சார்ந்திருக்கவும், அவருடைய சீடராக மாறவும், அவரோடு பந்தியில் அமரவும், அவரோடு இணைக்கப்படவும் ஒரு வாய்ப்பு. சகோதர சகோதரிகளே இந்த ஒன்றிப்பு தான், நிறைவான வாழ்வு வாழ நம்மை அனுமதிக்கிறது. அமைதியின் சமவெளிக்கு அவர் நம்மை இட்டுசெல்வார் என்று நம்புவோம். அவரின் வாயில்களின் வழியே நுழைந்து, நிறைவாழ்வை முழுமையாக வாழ்வோம். (யோவான் 10:9) வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறிச்செல்லும்போது, இந்த உலக செல்வங்கள் தருவதைப் போல் அல்லாமல், உண்மையான அமைதியும் முழுமையான நிறைவையும் நாம் பெற்றுக்கொள்வோம்.

இயேசு தாமே ஆட்டுக்கொட்டிலின் வாயில் என்று உறுதியளிக்கின்றார். அவர் வழியாய் நுழைவோருக்கு ஆபத்து இல்லை( யோவான்10:9) நாம் வழிதவறி தொலைந்துபோன ஆடுகளாக இருந்த போதிலும், தொடர்ந்து நம் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு அவரே நம் நல்ல ஆயன், என்று உறுதி கூறுகிறார். அவர் தரும் வாழ்வை முழுமையாகப் பெற்று அவரில் குடிகொள்ள தம் கரங்களை விரித்து நம்மை அழைக்கின்றார்.

அவரின் அழைப்புக்கு நாம் மறுமொழி கூறுகின்றோமா? ✝

> நாம் அடிக்கடி களைப்பும் சோர்வும் அடைந்தாலும், இவற்றிலிருந்து கடவுள் நம்மை வெளியே கொண்டுவருகிறார்.
>
> – புனித மேரி மெகிலோப்

**இன்றைய வாசகங்கள்:**

திருத்தூதர் பணிகள்: 2: 14, 36-41

திருப்பாடல்: 23: 1-6

1 பேதுரு: 2: 20-25

யோவான்: 10:1-10

**வாரம் ஒரு வசனம்**

இயேசுவே நமக்கு உண்மையான நிறைவை வழங்குவார்

INTERNAL CIRCULATION ONLY
BUL 18/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 மே (வைகாசி) மாதத்தின் கருப்பொருள்:*
***நிறைவான வாழ்வு***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** உயிர்ப்புக் காலம் 4ஆம் ஞாயிறு – நல்லாயன் ஞாயிறு 02 - 10 மே 2020
தி.பணி 2 :14, 36-41 தி.பா: 23: 1-3, 3-4, 5-6 1 பேதுரு 2: 20-25 யோவான் 10: 1-10
**" ஆண்டவரே என் ஆயர், எனக்கேதும் குறையில்லை." - தி.பா 23**

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18-26) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM13,460.00** | **RM1,330.00** | **RM850.00** |

***உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.***
***இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!***

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1)பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன்(017-615 8961) அல்லது பென்னதெத் (012- 2715840)**

பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். serembanvisitation@gmail.com

**கொவிட் 19 முன்னிட்டு அடுத்த அறிவிப்புகள் வரும் வரை திருப்பலிகள் ஆலயத்தில் நடைபெறாது.**

பங்கு அலுவலகம் மே 1-12 வரை மூடப்பட்டிருக்கும்.
அவசர தேவைகளுக்கு தொடர்பு கொள்ள: நாதன் 012-684 0750) கொலின்ஸ் (016-364 7506)

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்***
(1) ரோபர்ட் சந்தியாவு - இறப்பு: 21-4-20
(2) கெவின் சின் யோங் ஹுவா - இறப்பு: 21-4-20
(3) பீட்டர் டேவசன் த/பெ டேவிட் மோசஸ் - இறப்பு: 27-04-20
(4) கொவிட் 19 நோயால் இறந்த அனைத்து ஆன்மாக்களுக்காகவும்.
***முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!***

➢ **தெய்வீக உணர்வில் ஆழ்ந்திருங்கள்**

அன்புள்ள சகோதர சகோதரிகளே! அமைதியும் ஆசீரும் உங்களுக்கு உரித்தாகுக! நடமாட்டக் கட்டுப்பாடு இன்னும் நீட்டிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில், உங்களில் பலர், இதை எளிதாக எடுத்துக்கொண்டிருப்பீர்கள். பலருக்குஇது மன சோர்வையும், மன அழுத்தத்தையும், சலிப்பையும் தந்திருக்கும். மற்றும் இன்னும் பலருக்கு ஊதியத்தில் குறைவு வேலையும் பறிபோயிருக்கலாம். உரோமையர்: 8:28 " ***மேலும் கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் ".*** ஆண்டவரை அதிகமாக மாட்சிப்படுத்துங்கள். அவரை அதிகமாக அன்பு செய்து தொடர்ந்து அவரை நினைவுகூருங்கள். இவ்வாறு நீங்கள் செயலாற்ற முற்படும்போது, உங்கள் கவலை, வேதனை குறையத் தொடங்கும். இதுபோன்று தெய்வீக உணர்வில் நீங்கள் ஆழ்ந்திருக்கும்போது, உங்கள் உள்ளத்தில் கூடுதல் அமைதியும், மகிழ்ச்சியும் பெருகும். தொடர்ந்து உலகத்திற்காகவும், ஒருவர் மற்றவருக்காகவும் செபியுங்கள். ஆலயத்திற்கு நீங்கள் செல்லாதவராகவோ, கடவுள் பக்தி இல்லாதவராகவோ இருக்கலாம் ஆனால், தொடர்ச்சியான தெய்வீக உணர்வு உங்களில் செயலாற்றத் தொடங்கும். பாதுகாப்பாக இருங்கள். நலமோடு இருங்கள்.

***ஆசீரும் அமைதியும் எப்போது உங்களுள் இருப்பதாக!***
***அன்புடன் அருட்பணியாளர்கள்: சேவி & கென்னத்***

➢ **நடமாட்டக் கட்டுப்பாட்டை முன்னிட்டு, இறப்பு சடங்குகளுக்கான வழிமுறைகள்.**
(1) வீடுகளில் அல்லது பார்லரில் ஏழு நாள் செப வழிபாடு நடைபெறாது. குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே தனிப்பட்ட வகையில் செப வழிபாட்டை நடத்திக்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான செப புத்தகங்கள் பங்கு/அதிச விலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.. இறப்பு இல்லத்தில் நெருங்கிய உறவினர்கள் மிக குறைவான நேரமே இருக்க முடியும்.
(2) விழிப்பு செபங்கள் பங்கு குருவானவரால் இல்லத்திலேயே நடத்தப்பட வேண்டும். இது நம்முடைய நாட்டின் நடமாட்டக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின்படி இறப்பு இல்லத்தில் அதிகமான நபர்களைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் இதனால் நம்முடைய ஆலயமும் எந்த வழிபாட்டுக்கும் திறந்திருக்காது.
(3) இந்த நேரத்தில் பிற சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் கடைப்பிடிப்பது அவசியம். (இடைவெளியைக் கடைப்பிடித்தல்)

➢ ஏப்ரல் மாதத்தில் முன்பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் வேறு தேதிகளுக்கு மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

➢ தினமும் இணையத்தின் வழி திருப்பலிகளில் பங்கெடுக்க: ***www.Tv.ArchKL.org***
**2020 மே 02- 08 வரை**

| | | | | |
|---|---|---|---|---|
| *சனிக்கிழமை:* | *02-05-2020:* | *மாலை* | *6.00* | *தேசியமொழி* |
| *ஞாயிறு* | *03-05-2020 (நல்ல ஆயன் ஞாயிறு)* | | | |
| | | *காலை* | *7.30* | *தமிழ்:* |
| | | *காலை* | *9.00* | *மாண்டரின்* |
| | | *காலை* | *10.30* | *ஆங்கிலம்* |

*வார நாட்கள் (2020 மே 04- 08 வரை , 2020)* *மாலை* *6.00* *ஆங்கிலம்*